

அரியலூரில் என் உயிரினும் மேலான... முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி மாவட்டக் கழக ஒருங்கிணைப்பில் இளைஞரணி சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் தலைமை நடுவர், தமிழக அரசு கொறடா கோ.வி.செழியன், மேலிட பார்வையாளர், கழக மாநில இளைஞரணி துணை செயலாளர் ஆனந்தகுமார், கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.க.கண்ணன், மா.பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பரமேஷ்குமார், மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் தெய்வ.இளையராஜா, ஹரிபாஸ்கர் மற்றும் மாவட்ட , ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

# ஆலங்காயம் மேற்கு ஒன்றியத்தில் சாலை அமைக்கும் பணி!

## கதிர் ஆனந்த் எம்.பி. இன்று துவக்கி வைக்கிறார்!

திருப்பத்தூர், ஆக. 21-

திருப்பத்தூர் மாவட்டம் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் பி.எம். ஜி.எஸ்.ஒய். திட்டத்தில் வழங்கப்பட்ட தார்ச் சாலை அமைக்கும் திட்டப் பணிகளில் கதிர் ஆனந்த் எம்.பி. கலந்து கொண்டு துவக்கி வைக்கிறார்.

இன்று (21.08.2024) காலை 9.45 மணி - பீமகுளம் ஊராட்சி மந்தாரக்குட்டை முதல் மலைரெட்டியூர் வரை ரூ.3.00 கோடி தார்ச் சாலை அமைக்கும் பணியையும்,

'காலை 10.15 மணி - நிம்மியம்பட்டு ஊராட்சி சுண்ணாம்பு பள்ளம் முதல் கூவல் குட்டை காளான் வட்டம் வரை ரூபாய் 5.00 கோடி தார்ச் சாலை அமைக்கும் பணியையும்,

காலை 10.45 மணி - வடக்குப் பட்டு சாலை ஜமான் கொல்லை முதல் குண்டியம்மன் கோயில் வரை ரூபாய் 3.05 கோடி தார் சாலை அமைக்கும் பணியையும், கதிர் ஆனந்த் எம்.பி. துவக்கி வைக்கிறார்.





முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகத்தை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் வரவேற்றார். சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் அ.சிவா, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் ஷீலா தேவி சேரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்:

# ஒன்றிய - நகர - பேரூர்களுக்கான பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ். ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, ஆக.21-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



கடந்த 17.08.2024ம் தேதி அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் தளபதி ஆணைக்கிணங்க புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களுக்கான பொது உறுப்பினர்கள் கூட்டம் முதற்கட்டமாக கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளபடி நடைபெறும். பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

22.08.2024-காலை 11.30-அரிமளம் வடக்கு, அரிமளம் தெற்கு மற்றும் அரிமளம் பேரூர்-அரிமளம் CVR மண்டபம், 22.08.2024-மாலை4.30 - அறந்தாங்கி தெற்கு- நாகுடி ஸ்ரீராம் மண்டபம் 22.08.2024-மாலை 6.00- அறந்தாங்கி நகரம்-நூர் மஹால், 23.08.2024-மதியம் 12.00-பொன்னமராவதி வடக்கு, பொன்னமராவதி தெற்கு மற்றும் பொன்னமராவதி பேரூர்- பொன்னமராவதி மீனாட்சி மண்டபம், 23.08.2024- மாலை 4.00-திருமயம் வடக்கு, திருமயம் தெற்கு- திருமயம் AKP திருமண மஹால், 23.08.2024-மாலை 6.00 - அறந்தாங்கி கிழக்கு, அறந்தாங்கி மேற்கு-ஆவணத்தான்கோட்டை SPM மண்டபம்,24.08.2024-காலை 10.00-ஆவுடையார்கோவில் வடக்கு, ஆவுடையார்கோவில் தெற்கு-TRP திருமண மண்டபம்,25.08.2024-பிற்பகல்- ஆலங்குடி தொகுதி, 28.08.2024 -காலை 10.00 - மணமேல்குடி வடக்கு-வசந்த மண்டபம், 28.08.2024-நண்பகல் 12.00-மணமேல்குடி தெற்கு-கோட்டைப்பட்டினம், நிஷா மண்டபம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### புதுக்கோட்டை - செட்டியார்பட்டியைச் சேர்ந்த

# மாரிக்கண்ணு சாலை விபத்தில் பலி : குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஆக.21-

முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வடவாளம், தெற்கு செட்டியாப்பட்டி, சொரியன் தெருவைச் சேர்ந்தவர், சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாகச் சென்றபோது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த மாரிக்கண்ணு என்ப வரின் வாரிசுதாரரிடம், முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, தலைமையில் 16.08.2024 அன்று அவர்களது குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலையினை வழங்கினார்.

புதுக்கோட்டை வட்டம், வடவாளம், சொரியன் தெருவைச் சேர்ந்த மாரிக்கண்ணு (வயது 46) க/பெ.ரெங்கசாமி என்பவர் கடந்த 07.08.2024 அன்று சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது புதுக்கோட்டை மாவட்டம், அம்மாச்சத்திரம் அருகே இருசக்கர வாகனம் ஒன்று எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மூளைச்சாவு அடைந்து சிகிச்சை பலனின்றி 08.08.2024 அன்று உயிரிழந்தார்.

மேலும், இந்த விபத்தில் மூளைச்சாவு ஏற்பட்டதைத் தொடர்ந்து உயிரிழந்த மாரிக்கண்ணு உடல் உறுப்புகள் அவரது குடும்பத்தினரின் சம்மதத்துடன் தானமாக வழங்கப்பட்டு, அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 இலட்சம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினரை 16.08.2024 அன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, ரூ.3 இலட்சம் மதிப்பிலான முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கான காசோலையினை வாரிசுதாரரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், வட்டாட்சியர் பரணி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மு.க.ராமகிருஷ்ணன், வடவாளம் ஒன்றியக்குழு உறுப்பினர் கலியமுத்து, நகர் மன்ற உறுப்பினர் எம்.எம். பாலு, தெற்கு செட்டியாப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் அருள் சிறுமலர் ஞானம், கிராம நிர்வாக அலுவலர் எடித்ரேனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

### இட ஒதுக்கீட்டினைப் பறித்து -

# அரசியல் சாசனத்தின் மீது பிரதமர் மோடி தாக்குதல் நடத்துகிறார்!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.21-



பட்டியல் - பழங்குடி மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டினை மோடி அரசு பறிக்கிறது என்றும் இதன் மூலம் பிரதமர் மோடி அரசியல் சாசனத்தின் மீது தாக்குதல் நடத்துகிறார் என்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

யு.பி.எஸ்.சி. சமீபத்தில் இணைச் செயலாளர்கள், இயக்குநர்கள், துணை செயலாளர்கள் போன்ற பதவிகளுக்கு நேரடி ஆள்சேர்ப்பு மூலம் பணியமர்த்துவதற்கான அறிவிப்பினை வெளியிட்டிருந்தது. இது எஸ்சி, எஸ்டி மற்றும் ஒபிசி பிரிவினருக்கான இடஒதுக்கீட்டு உரிமைகளை குறைத்து மதிப்பிடுகின்றது என்று எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்திருந்தன. என்றாலும், சில பதவிகளுக்கு சிறப்பு ஞானம் தேவைப்படுகிறது என்று ஏஆர்சி அங்கீகரித்துள்ளது. அது அரசுப் பணியாளர்களிடம் இருப்பதில்லை, அப்படியான நேரத்தில் அந்த இடைவெளிகளை நிரப்ப தனியார் துறை, கல்வித் துறை மற்றும் பொதுத் துறைகளில் இருந்து நிபுணர்களை எடுத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைக்கிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியிருப்பதாவது:-

“அரசுப் பணியாளர்களை யுபிஎஸ்சி மூலம் தேர்வு செய்வதற்கு பதிலாக ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) வழியாக சேர்ப்பதன் மூலம் பிரதமர் நரேந்திர மோடி அரசியல் சாசனத்தின் மீது தாக்குதல் நடத்துகிறார். ஒன்றிய அரசின் முக்கியமான பணிகளுக்கு லேட்ரல் என்ட்ரி மூலம் ஆட்களைச் சேர்ப்பது பட்டியல், பழங்குடி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கான இடஒதுக்கீடு வெளிப்படையாக பறிக்கப்படுகிறது என்று அர்த்தம்” என்று தெரிவித்திருந்தார்.

**அகிலேஷ் யாதவ்**

இண்டியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் அகிலேஷ் யாதவ் இந்த நேரடி ஆள்சேர்ப்பு நாட்டுக்கு எதிரான மிகப் பெரிய சதி என்று கூறினார்.

தனது எக்ஸ் பதிவொன்றில் அகிலேஷ், “யுபிஎஸ்சியின் பின்வாசல் வழியாக தங்களின் சித்தாந்தக் கூட்டாளிகளை அரசு உயர் பதவிகளில் அமர்த்த பாஜக தீட்டுகின்ற சதிக்கு எதிராக நாடு தழுவிய அளவில் போராட்டம் தொடங்குவதற்கான நேரம் வந்துவிட்டது. இந்த நேரடி ஆள் சேர்ப்பு முறை இன்றைய அதிகாரிகளுக்கான வாசல்களை அடைக்கும் அதே நேரத்தில் இளைய அதிகாரிகள் நிகழ் காலம் மற்றும் எதிர்காலத்தில் உயர் பதவிகளுக்கு செல்லும் வாய்ப்பைத் தடுக்கிறது. சாமானிய மக்கள் உதவியாளர்களாகவும் குமாஸ்தாக்களாகவும் மட்டும் இருக்கும் நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

பாஜக அரசு இதனைத் திரும்ப பெறவில்லை என்றால், அக்டோபர் 2ம் தேதி ஒரு புதிய இயக்கத்தைத் தொடங்க எங்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நிற்க இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். அரசு இயந்திரத்தை கார்ப்பரேட்கள் கைப்பற்றுவதை எங்களால் ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது” என்று அகிலேஷ் தெரிவித்துள்ளார்.




கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி, மையனூர் புனித மைக்கேல் ஆர்.சி அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் நாட்டின் 78 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார்.இதில் பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள்,மாணவ மாணவியர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர்,கிளை கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




மாநகர் மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாநகர் மாவட்ட பொருளாளர் எஸ்எம்பி. முருகன் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக சொத்துப் பாதுகாப்புக் குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி,கோவை மாநகராட்சி மேயர் இரா. ரங்கநாயகி,கழக தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து,கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர்.அருள்மொழி, தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் LPFதமிழ்ச்செல்வன், மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் மீனா ஜெயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.நா.உதயகுமார், ஆடிட்டர் சசிகுமார்,ஆர். மணிகண்டன், நோயல் செல்வம்,ச.குப்புசாமி,சங்கனூர் ஆனந்தகுமார், சரஸ்வதி புஷ்பராஜ், பகுதிச் செயலாளர்கள் ஆர்.எம். சேதுராமன்,வ.ம.சண்முகசுந்தரம்,பரணி கே.பாக்கியராஜ், எ.எம்.கிருஷ்ணராஜ், கே.எம்.ரவி,கோவை லோகு, அஞ்சுகம், பழனியப்பன்,எஸ்.எம்.சாமி, மு.சிவா,மா.நாகராஜ்,இரா. சேரலாதன்,மார்க்கெட்எம்.மனோகரன்,வி.ஐ.பதுருதீன்,அணிகளின் அமைப்பாளர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத் தலைவர் பதவிக்கு

# விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஆக.21-

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத் தலைவர் பதவிக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

மின்சாரச் சட்டம் 2003 ன் சட்டப் பிரிவுகளின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு சட்டப்படியான ஆணையமாக தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்தில் 16.08.2024 முதல் தலைவர் பதவி காலியிடம் ஏற்பட்டுள்ளது.

இந்த பதவியினை நிரப்புவதற்காக சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் சி.டி.செல்வம் அவர்களின் தலைமையில் அரசு தலைமைச் செயலாளர் மற்றும் மத்திய மின்சார அதிகார அமைப்பின் தலைவர் ஆகியோரை உறுப்பினராகக் கொண்ட தேர்வுக் குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது.

தேர்வுக் குழுவின் முடிவின்படி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர் பதவியினை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் 16.08.2024 அன்று மாலை 6.00 மணி வரை வரவேற்கப்பட்டது.

இந்நிலையில், தேர்வுக் குழுவின் முடிவிற்கிணங்க தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் பதவிக்கு விண்ணப்பம் செய்வதற்கான கால வரம்பினை 31.08.2024 மாலை 6.00 மணி வரை மேலும் நீட்டிப்பு செய்து நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இது குறித்த விவரங்கள் இணையதள முகவரி https://www.tn.gov.in/department/7ல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் தலைவர் பதவிக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# கதிர்ஆனந்த் எம்.பி.வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் இன்று (21.08.2024)கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**திருப்பத்தூர் மாவட்டம் - ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்**

| வ.எண் | நேரம் | இடம் |
|---|---|---|
| 1. | பகல் 12.30 மணி | வெலதிகாமணிபெண்டா |
| 2. | பகல் 2.00 மணி | ஈச்சங்கால் |
| 3. | பகல் 2.15 மணி | தேவஸ்தானம் |
| 4. | பகல் 2.30 மணி | ஜாப்ராபாத் |
| 5. | பகல் 2.45 மணி | மதனாஞ்சேரி |
| 6. | பகல் 3.00 மணி | பள்ளிப்பட்டு |
| 7. | மாலை 3.15 மணி | இளையநகரம் |
| 8. | மாலை 3.30 மணி | கொல்லகுப்பம் |
| 9. | மாலை 3.40 மணி | சம்மந்திகுப்பம் |
| 10. | மாலை 4.00 மணி | கிரிசமுத்திரம் |



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக அதன் மாநிலத்தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினருமான ரெ.தங்கம், புதுக்கோட்டை புதிய மாநகராட்சியின், முதல் பெண் மேயர் திலகவதி செந்தில் அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து பாராட்டினார். சங்க மாநில துணை பொதுச்செயலாளர் ஆசிரியர் க.காந்தி, புதுக்கோட்டை மாவட்ட சங்க தலைவர் கலிபுல்லா சுல்தான், மாவட்ட சங்க செயலாளர் வி.மலர்விழி,பிஆர்ஓ (ஆசிரியர்) ஆர். நெடுஞ்செழியன், சேவகன் தெரு வி.ராஜு ஆகியோரும் வாழ்த்துகளை தெரிவித்தனர்.